Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 4, No.1, 2023, (43-57)

# தமிழ் மொழி இலக்கியம் கற்பித்தலில் வலையொலியின் பயன்பாடு

## An Innovation Teaching of Tamil Language Literature Through Youtube

**S. Thines Nair**

Faculty of Languages and Communication
Universiti Pendidikan Sultan Idris, 35900 Tanjong Malim, Perak, Malaysia

**Selvaraj R**

Assistant lecturer, Government Arts College, Coimbatore, India

**Corresponding author: thinesnair99@gmail.com*

**Published:** 27 June 2023

**To cite this article (APA):** Nair, S. T., & Selvaraj, R. (2022). தமிழ் மொழி இலக்கியம் கற்பித்தலில் வலையொலியின் பயன்பாடு: An Innovation Teaching of Tamil Language Literature Through Youtube. *Journal of Valartamil*, *4*(1), 43–57. https://doi.org/10.37134/jvt.vol4.1.5.2023

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol4.1.5.2023

**சுருக்கம்**: யூடியூப் இணையம் மூலம் தமிழ் மொழி இலக்கியத்தை கற்பிப்பதில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் ஒரு புதுமை. முதலில் தமிழ் மொழி இலக்கியங்களில் ஒன்று திருக்குறள். 3 இந்தப் புதுமைப் போதனையில் திருக்குறள் பயன்படுத்தப்பட்டது. பின்னர், "Obs (open broadcast software)" மற்றும் "screencast o matic" மென்பொருளை ஒருங்கிணைத்து ஸ்லைடுகள் மூலம் பதிவேற்றலாம். அதாவது, நாம் பேசும் காட்சிக்கு எங்கள் முகத்தை இணைத்து, எங்கள் "ஸ்லைடுகளை" பின்னால் வைக்கிறோம். எனவே, நாம் தான் கற்பிக்கிறோம் என்பதை அனைவரும் அறிந்து கொள்ளலாம். பின்னர் அவரது கற்பித்தலுக்கு தேவையான அனைத்து பதிவுகளையும் வீடியோ மூலம் செய்து youtube இணையத்தில் பதிவேற்றவும். ஏனெனில் வீடியோ வடிவில் கற்கும் முறை சமகால மாணவர்களிடையே வரவேற்கத்தக்க ஒன்றாக கருதப்படுகிறது. எனவே, தமிழ் இலக்கியம் கற்பிக்கும் ஆசிரியர்களாலும், தமிழ் இலக்கியம் கற்கும் அல்லது கற்க விரும்பும் மாணவர்களாலும் இந்தப் புதுமையின் வழியை மிக எளிதாகக் கையாள முடியும்.

**முக்கிய வார்த்தைகள்**: தமிழ் மொழி இலக்கியம் கற்பிப்பதில் புதுமை, தொழில்நுட்பம், யூடியூப், திரைப் பதிவு, வீடியோ காட்சி, எளிதான மற்றும் ஈர்க்கும் கற்பித்தல்

**Abstract:** An innovation in the use of technology in the teaching of Tamil language literature through the youtube web. First of all, one of the Tamil language literatures is Thirukural. 3 Thirukkural was used in this innovation teaching. And then, "Obs (open broadcast software)" and "screencast o matic" software can be integrated and uploaded through the slides. That is, we attach our face came to the scene we are talking about and place our “slides” behind us. So, everyone can know that we are just teaching. And then make all the records required for his teaching through video and upload them on the youtube web. This is because the method of learning in video format is considered to be a welcome one among

contemporary students. So, the way of this innovation can be handled very easily by the teachers who teach Tamil literature and the students who are learning or wanting to learn Tamil literature.

**Keywords:** Innovation, Technology in the teaching of Tamil language literature, Youtube, Screen record, Video presentation, Easy and attracting teaching

## முன்னுரை

முந்தயக்காலகட்டத்தில் நாம் செய்யக் கூடியச் செயல்களை நாமே செய்துக்கொள்வோம் ஆனால் இன்றோ நமக்குத் தேவையானவற்றை வீட்டிலிருந்தப்படியே கைகளில் வந்துச் செர்கிறது. சாத்தியமில்லை என்று எண்ணியதெல்லம் இக்காலத்தில் சாத்தியமாக்கப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுகளில் இணையம் பெரும் பங்கு வகித்திருந்தாலும், 2021-ஆம் நூற்றாண்டின் முதன்முதல் பங்காக இணையம் மிகப் பெரிய பங்கை வகிக்கிறது. அனைத்துத் துறைகளிலும், தனிப்பட்ட வாழ்க்கைகளிலும், இணையத்தில் தொடர்பின்றி எதுவும் சாத்தியமில்லை என்றாகிவிட்டது. தற்போதையக் நாட்டுச் சூழ்நிலையானது மிகவும் ஆபத்தான நிலைகளில் மக்கள் கவலைகிடமான வாழ்க்கையை மேற்கொள்கின்றனர். இக்கோரோனா தொற்றின் விழைவு நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமாகவே உள்ளது. ஆக மக்களின் அன்றாட வாழ்கை நிலை முற்றிலும் சீர்குழையாது இருக்க இவ்விணையம் பெரும் பங்கு வகிக்கிறது. உதாரணத்திற்கு நமது நாட்டில் அரசாங்க துறையில் பணி புரிபவர்களில் 80 % வீட்டிலிருந்தப்படியே வேலை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. “Work from Home”. மேலும் தனியார் துறைகளில் வீழ்ச்சி கண்டுள்ளது. அதாவது, முடி திருத்தும் கடை, அணிச்சல் கடை, பொன்ற சிறு தொழில் வியாபரம் செய்பவர்களின் வருமானமும் வீழ்ச்சி கண்டுள்ளது. இவர்களில் பலர் இணைய சந்தை தளத்தில் தந்து வியாபரத்தை மேற்கொள்கின்றனர். இவ்வாறு மக்களின் வருமாணத்திற்கும் இணையம் வழிவகிக்கிறது.

அதேபோல், கல்வித் துறைகளிலும் தற்காலத் தொழில்நுட்பம் பெறும் பங்கு வகிக்கிறது. முந்தைய காலக்கட்டத்தில் மாணவர்கள் பள்ளிகளில், பிரத்தியேக வகுப்புகளில், அதிகம் தங்களின் கல்வியை மேற்கொள்வர். மிகவும் குறுகிய எண்ணிக்கையிலானவர்களே இணையத்தில் கல்வி மேற்கொண்டனர். நமது நாட்டை பொருத்தவரை நேருக்கு நேர் கல்வி (face - to - face) முறையே பயன்படுத்தப்பட்டன. இன்றைய நாட்டுச் சூழ்நிலையில் அனைத்து மாணவர்களும், அதாவது

ஒன்றாம் ஆண்டு முதல், பி.எச்.டி வரை கல்வி மேற்கொள்பவர்கள் இணையத்தில் “Google-meet”, “Google-Class-Room”, “Zoom” ஆகிய செயலியின் மூலம் தொடர்கின்றனர். இதன்வழி அனைத்து மாணவர்களும் கல்விக்குத் தேவையான அனைத்தையும் இணைய மூலமாக பெறுகின்றனர். ஆக, மாணவர்களுக்குத் தேவையான அனைத்தும் சுலபமாககவும் உடலுழைப்பைக் குறைத்தும், நேரத்தை மிச்சப்படுத்தியும் இவ்விணையம் உதவிப்புறிகிறது. இதனால் மாணவர்கள் எவ்வித தடையுமின்றி தங்கல் கல்வியை மேற்கொள்வின்றனர்.


தொடர்ந்து, மாணவர்கள் இவ்வாறான இணையத் தொழில்நுட்பக் கல்வியை மேற்கொள்ள தடைகளிம் பல உள்ளன. முதல் முதலாக இணையத்தை அணுகும் மாணவர்கள் சற்று தடுமாற்றம் அடைவர். என்னதான் கைத்தொலைப்பேசியில் “whatsapp”, “telegram”, “google meet” போன்றவை விவரமாக பயன்படுத்தத் தெரிந்திருந்தாலும், SSPS, HDML, OFFICE XP, EXCEL, DRIVE போன்ற கல்விக்கு தேவையான முக்கிய மென்பொருள்களைக் கையால தவறுகின்றனர். மாணவர்கள் முக்கியமாக கல்வி பயிலத் தேவைப்படும் செயலி, மென்பொருள்களை தெரிந்து அதனை கற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு சிறந்த முறையில் அம்மென்பொருள்களைக் கையாண்டால் இக்கால தொழில்நுட்பக் கற்றல் கற்பித்தலில் சிறந்து விழங்க வழிவகுக்கும்.

ஆக, இக்காலத்தில் தமிழ் மொழி கற்பித்தலில் தொழில்நுட்பத்தின் பயன்பாடு சிலவற்றை இருந்தும் பிற பென்பொருள்கள் (Google-Meet, Zoom) போல பெரிதளவில் நமது நாட்டில் பயன்பாட்டில் இல்லை. இந்நிலை எதனைக் குறிக்கிறது.

“நமது நாட்டில் தமிழ் மொழி அறிஞர்கள் இன்னும் தன்னை புதுப்பித்துக் கொள்ளவில்லை என்று அர்தமா? அல்ல தமிழர்கள் தொழிநுட்ப அழவில் இன்னும் உயரவில்லையா?”,


இரண்டும் இல்லை என்பது எனது கருத்தாகும். தமிழர்கள் இணையத்தில் தமிழ் மொழியைப் பயன்படுத்துவது மிகவும் குறைவாகவுள்ளதால் தமிழ் மொழியில் இயங்கிக்கொண்டிருக்கும் தமிழ் செயலிகள் பெரிதளவு வெளிப்படாத்தற்கு முதல் காரணமாகும். அவ்வாறு பெரிதளவு வெளிப்பாடாதத் தமிழ்ச் செயலிகள் தமிழிணையம், அழகி.கொம், வானி.நீச்சல்காரன், கண்டுபிடி.கொம் போன்றவை பெரிதளவு மாணவர்களுக்கும் தெரியவில்லை எனலாம். ஆக தமிழ் மொழியில் உள்ள செயலிகளை கண்டறிந்து பயன்படுத்த வேண்டும்.

ஆக, இக்கட்டுரையில் தமிழ் மொழி இலக்கியம் கற்பித்தலில் வலையொளியின் (Youtube) துணைக்கொண்டு புத்தாக்கம் ஒன்று செய்துள்ளேன். தற்போதைய நவீன காலத்தில் வலையொளியின் பங்கு மிகவும் பெறிதாக உள்ளது. இதனை அறியத நபர்களை விரல்களால் எண்ணி விடலாம். அந்த அளவிற்கு உலகம் முழுவதும் இது ஆக்கம் கொண்டுள்ளது. வலையொளியைக் கொண்டு தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்கள் மிக எழிதாக கற்பிக்க முடியும். முதலில் வலையொளியில் நாம் தமிழ் தட்டச்சு பயன்படுத்த முடியும் என்று பலரும் அறிவோம். ஆக தமிழ் மொழியில் கற்பதற்கு அனைவரும் தமிழ் தட்டச்சுகளை தங்களின் கணினி, கைத்தொலைப்பேசி, மற்றும் பாடம் பயில பயன்படுத்தும் தொழில்நுட்பக் கருவிகளில் பதிவிரக்கம் செய்து கொள்ளுதல் மிகவும் அவசியம். உதாரணத்திற்கு, செல்லினம் மற்றும் இ-கலப்பை போன்ற தட்டச்சு செயலிகளை இலவசமாகவே பதிவிரக்கம் செய்துக்கொள்ளலாம்.




படம் 1: செல்லினம் செயலி.

Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 4, No.1, 2023, (43-57)




படம் 2: இகலப்பை செயலி.

## ஆய்வு கண்டுபிடிப்பு

**<u>வலையொளியில் இலக்கியம் கற்பித்தல்.</u>**

வலையொளி என்பது காணொலி பகிர்வு சேவையாகும். இதை பயன்படுத்துபவர்கள் மற்ற பயனர்கள் பதிவேற்றும் காணொலிகளை பார்க்கவும், சுய காணொலியைப் பிறர் பார்க்கும் வண்ணமாகவும் பதிவேற்ற அனுமதிக்கிறது. இந்த வலையொளியின் சேவை 2005 -ஆம் ஆண்டில் ஒரு வளைத்தளமாகத் தொடங்கப்பட்டது மற்றும் “google” -இல் 2006 இல் கையகப்படுத்தப்பட்டது. இந்த வலையொளி தனது சுலோக முழக்கமாகக் கொண்டிருப்பது (The slogan of the YouTube website is "Broadcast Yourself") அதாவது தன்னை தானே வெளிப்படுத்துவதாகும். ஆக இத்தொழில்நுட்பக் கருவியானது குறிப்பாக தங்கள் தாயார் செய்த காணொலியை வெளியிட விரும்பும் சாதாரண மக்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை இது குறிக்கிறது. மேலும், “YouTube” ஒரு வணிக தளத்திற்கு சேவை செய்ய முடியும் என்றாலும், பெரும்பாலான மக்கள் வேடிக்கைக்காக “YouTube” ஐப் பார்வையிடுகிறார்கள். வீடியோ பதிவு செய்யும் திறன் கொண்ட பலர் டிஜிட்டல் கேமராக்கள் அல்லது செல்போன்களைக் கொண்டு செல்வதால், முன்பை விட அதிகமான நிகழ்வுகள் இப்போது வீடியோவில் பிடிக்கப்பட்டுள்ளன. இது ஏராளமான பொழுதுபோக்கு வீடியோக்களின் தொகுப்பை உருவாக்கியுள்ள நிலையில், பொதுவில் அவர்கள் எதைச் செய்தாலும் வீடியோவில் சிக்கக்கூடும் என்பதை மக்கள் அறிந்திருக்க வேண்டும். வீடியோவில் ஏதேனும்

பதிவுசெய்யப்பட்டால், அது உலகம் முழுவதும் பார்க்க வலையொளியில் முடிவடையும்.

இணைய வழி கல்வி கற்பித்தலுக்குத் தேவையான அனைத்தும் வலையொளியில் அதிகமாகவே உண்டு. முதலாவதாக, தமிழ் மொழி இலக்கியங்களில் ஒன்றான திருக்குறளை எவ்வாறு வலையொளி மூலம் கற்பிக்கலாம் என்பதை காணலாம். தனது கற்பித்தலுக்குத் தேவையான பதிவுகள் அனைத்தையும் காணொலி மூலமாக தயாரித்து வலையொளியில் பதிவேற்றம் செய்ய வேண்டும். ஏனெனில் காணொலி வடிவில் கற்கும் வழிமுறை தற்கால மாணவர்களிடையே வரவேற்கத்தக்க ஒன்றாக கருதப்படுகிறது.

**அ) காணொலி தயாரித்தல்.**

காணொலி வடிவம் என்பது ஆசிரியர்கள் பயிற்றவிருக்கும் திருக்குறளைக் கொண்டு அதன் பொருள் விளங்கும் வண்ணம் காணொலி தயார் செய்ய வேண்டும். உதாரணத்திற்கு படிவம் 1 மாணவர்களின் பாடத்தில் உள்ள மூன்று திருக்குறள், அவை

I. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். (69)

II. அழுக்காறு ஆவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம் (35)

III. குணம்நாடி குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல் (504)

ஆகும். குறள் 69 – இல் ஆசிரியர் தன்னை தானே ஒரு படைப்பைஹ் தாயார் செய்து படைக்க வேண்டும். அதனுள் திருக்குறள், திருக்குறளின் எண், அதன் பொருள், விளக்கம் மற்றும் தன் சுய அனுபவத்தில் அத்திருக்குறள் எவ்வாறு பயனாக உள்ளது என்பதைச் சேர்த்து ஒரு விளக்கம் தந்து அதனை வலையொளியில் பதிவேற்றம் செய்ய வேண்டும். ஆகையால் இந்தத் திருக்குறளை பற்றியத் தெளிவான விளக்கத்தை தங்களின் மாணவர்கள் மட்டுமின்றி அனைத்துலகரீதியில் இத்திருக்குறளின் பொருளைத் தெரிந்துக்கொள்ள எண்ணும் மாணவர்களும் தெரிந்துக்கொள்ளலாம். அதோடுமட்டுமின்றி, இந்த காணொலியை எத்ததை முறை வேண்டுமானாலும் பார்க்கலாம், மற்றும் அனைத்து நேரங்களிலும் பார்க்கலாம். ஆக, வகுப்பறையில் பயிற்றுவிக்கும் திருக்குறளானது மீண்டும் அதேபோல் யாரும் பயிற்றுவிக்க மாட்டார்கள் ஆனால், இந்த வலையொளியில் உள்ள காணோலியானது என்றும் அழியாதிருக்கும். வலையொளியின் இணைப்பு மட்டும் இருந்தால் பொதுமானது,

Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 4, No.1, 2023, (43-57)


அனைவரும் அந்தக் காணொலியை மிக எழிதாகத் தங்கள் கைகளில் வைத்திருக்கும் கைத்தொலைப்பேசியின் மூலமாகவே காணலாம்.

இதனைத் தொடர்ந்து, ஆசிரியர்கள் ஒவ்வொரு திருக்குறளுக்கேற்ப தாமகவோ அல்லது தங்கள் மாணவர்களின் துணைக்கொண்டு இவ்வாரான வழிமுறைச் செயல் படுத்தலாம். தொடர்ந்து அடுத்தடுத்த திருக்குறளின் விளக்கவுரையைப் பதிவேற்றம் செய்வதன் மூலம் மாணவர்களுக்கு மிகவும் எலிய கற்றல் கற்பித்தலைத் தர முடிகிறது. இவ்வழிமுறையானது அனைத்துலக தமிழ் மொழி கற்கும் மாணவர்களுக்குப் பெறும் பங்கு வகிக்கும் என்பதும் தமிழ் மொழி இலக்கியத்திற்கும் பெரும் பக்க பலமாக அமையும் என்பது திண்ணம்.

**ஆ) திருக்குறள் தொடர்பான குறிப்புகள் மற்றும் அதன் வரலாறு தொகுப்புகளை பதிவேற்றம் செய்தல்.**

திருக்குறள் குறிப்புகள் என்றால் திருக்குறளை இயற்றியவர், மொத்தம் எத்தனை பால் மற்றும் அதிகாரங்கள் உள்ளன, அதில் எத்தனை குறள்கள் இடம்பெற்றுள்ளன என்பதை குறிப்பதாகும். ஆக, இக்குறிப்புகள் சேகரித்து ஓர் காணொலி காட்சியாக படைத்தால் மாணவர்களிடையே பெறிய வரவேற்ப்பைப் பெறும். இத்தகைய காணொலியை தயார் செய்வதற்க்கு சில நல்ல இலவச மென்பொருள் கருவிகள் உள்ளன.


அவை, “Obs (open broadcast software)” மற்றும் “screencast o matic” மென்பொருள்கள் மூலம் திருக்குறள் சம்பந்தமான குறிப்புகளை (slides) - மூலம் ஒருங்கினைத்து பதிவேற்றம் செய்யலாம். அதாவது, நாம் பெசும் காட்சியிலும் நமது முகத்தோடு இணைத்து, நமது பின்னால் நமது “slide” - கள் இடம்பெரும். ஆக நாம் தான் பயிற்றுவிக்கிறோம் என்று அனைவராலும் அறிந்துக்கொள்ள முடியும். உதாரணத்திற்கு,





படம் 3

இந்த படத்தில் உள்ளது போல நமது உடல் மொழியுடன் சேர்த்து இம்மாதிரியான காணொலிகளைத் தாயார் செய்யாலாம். ஆக, மாணவர்கள் தங்களின் ஆசிரியர்களைப் பற்றி இன்னும் சுலபமாக

தெரிந்துக்கொள்ள இது வழிவகுக்கும். ஆசிரியர்களும் இந்த மென்பொருளினை சிறப்பாக பயன்படுத்தி இன்னும் நிறைய விதமான படைப்புகளைப் படைக்களாம். இன்றைய காலக்கட்டத்தில் ஆசிரியர்கள் இம்மாதிரியான வழிமுறைகளைப் பயன்படுத்த தொடஙகிவிட்டனர் என்றும் கூறலாம். இன்றைய கொரோனா தொற்று பரவும் காலத்தில், இணைய வகுப்புகளில் ஆசிரிர்கள் இம்மாதிரியான வலையொளி இணைப்புகளைத் தந்து அதனை பார்த்துப் படிக்கச் சொல்கின்றனர். ஆகையால், இணையச் சிக்கலை எதிர்நோக்கும் மாணவர்களுக்கு இந்த மென்பொருளின் பயன் மிகவும் பெரிது.



படம் 4: “screencast o matic”



படம் 5: “Obs (open broadcast software)”

என்னதான் படம் 4 மற்றும் படம் 5 -இல் உள்ள மென்பொருள்கள் நல்ல சிறந்த காணொலியைத் தயாரிக்க உதவிப்புறிந்தாலும், வலையொளியின் பங்கின்றி அதனை யாரிடமும் சுலபமாக கொண்டுச்செல்ல முடியாது.

தொடர்ந்து, எனது சிந்தனையில், திருக்குறளை கற்பிப்பதற்க்குப் புதிய முறையாக இந்த வலையொளியை பயன்படுத்தினால் பெறிய அளவிலான வெற்றியடைக்கூடிய கற்றல் கற்பித்தலை உறுவாக்கலாம்

என்பதை நான் அறிந்த உண்மையாகும். அதாவது, பாடல்கள் மூலம் மாணவர்களுக்கு வலையொளி மென்பொருளைக் கொண்டு கற்றல் கற்பித்தல் ஒன்றினை நடத்துதலாகும். உதாரணத்திற்கு, வகுப்புகளில் வலையொலியில் உள்ள பாடல்களை மாணவர்களுக்கு பொட்டுக் காட்டி படித்துத்தர வேண்டும். எடுத்துக்காட்டாக, பாடலின் பெயர் அன்பம் அரணம், எழுதியவர் கலைஞர் ராகவேந்திரா மற்றும் சுர்முகி அவர்கள் தயாரிப்பு ஆர்.ஏ.ரா. ஆக இந்த பாடல் மூலம் பயிற்றுவிப்பதனால், அதன் பிரதிபலிப்பாக மாணவர்கள், வீட்டுக்குச் செல்லும் போதோ அல்லது உணவு உண்ணும் வேலையிலோ இப்பாடலை முனுமுனுத்துக் கொண்டே இருப்பர். ஆக, இத்தகை கற்றல் கற்பித்தல் முறை மாணவர்களுக்கு மிகவும் எளிதாக மனதில் பதியும் என்பதை நன்கு அறியமுடிகிறது. ஆக இந்த முறை நிச்சயம் பெரிய அளவில் வரவேற்கப்படும் என்பது திண்ணம்.

**இ)தொடர்ந்து, இலக்கியம் சார்ந்த படைப்புகளைச் சொற்பொழிவு வாயிலாகவோலோ பயிலரங்கம் மூலமாகவோ கற்றுத்தரலாம்.**

இவ்வலையொளி மென்பொருளைக் கொண்டு “லைவ்” (live) – ஆக படைப்புகளைச் சிறப்பாகச் செய்யலாம். இன்றைய மாணவர்களும் தங்கள் பல்கலைக்கழக இடுபணிகளை மேற்கொள்ள இந்த லைவ்-ஐ பயன்படுத்துகின்றனர். இதன்வழி மாணவர்களின் உழைப்பும் தேடலும் வெளிப்படுகிறது. தமிழ் இலக்கிய நூல்களான பக்தி இலக்கியங்களை எடுத்துக்கொண்டோமானால், 4 சிவனடியார்களையும், 12 ஆழ்வார்களைப் பற்றிய தக்வல்களைச் சேகரித்து, ஒரு சொற்பொழிவு “லைவ்” -ஆக செய்யலாம. இது மாணவர்கள் பேச்சுத் திறனையும் பென்பொருள்களைப் பயன்படுத்துவதிலும் மேலும் ஆழுமைப் பெறுவர்.


அதோடுமட்டுமின்றி, வலையொளியில் “லைவ்” செய்வதன் மூலம் அதனை அப்படியே பதிவு செய்யவும் முடியும். யாராவது, சொற்பொழிவு நேரத்தில் ஏதெனும் இணையச்சிக்கல் அல்லது கவனிக்கத் தவறினாலோ மீண்டும் அதனை எத்தனை முறை வேண்டுமானாலும் பார்த்து பயன் பெறலாம். ஆக, இந்த தொழில்நுட்ப பயன்பாடு அனைவருக்கும் பெறும் உதவியாக உள்ளது.

**ஈ) ஆசிரியர்கள் தங்கள் வேலை பழுவையும் நேரத்தை மிச்சப்படுத்தி செயல்படலாம்.**


ஆசிரியர்கள் வகுப்புகளில் படித்துக் கொடுக்க வேண்டிய இலக்கியப் பாடங்களை ஒவ்வொரு வாரங்களுக்கேற்றவாறு காணொலி வடிவில் முன்பாகவே தயார் செய்து வைத்திடலாம். உதாரணத்திற்கு, முதல் வாரத்தில், இலக்கியத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி அதற்க்கு உறுதுனையாக இருந்த அறிஞர்கள் என்ற தலைப்பைச் சார்ந்த காணொலி. இரண்டாம் வாரத்தில், முதன்மை அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் பங்கு ஆகிய தலைப்பைச் சார்ந்தக் காணொலி. இவ்வாறு ஒவ்வொரு படிவம் ஆரம்பிப்பதற்க்கு முன்பாகவே தயார் செய்து வலையொளியில் பதிவேற்றம் செய்து விடலாம். அப்போது நாம், அந்த காணொலியை "லின்க்" (Link) உள்ளவர்கள் மட்டுமே காணலாம் என்றமாதிரி "செட்டிங்" (Setting) செய்து வைக்கலாம்.

அதனை செய்யும் முறையானது, முதலில் தயார் செய்தக் காணொலியை தமது வலையொளி அகப்பக்கத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். அதன் பிறகு நமது காணொலியில் தலைப்பு மற்றும் விபரம் பதிவு செய்ய வேண்டும். பின்பு இந்த காணொலி குழந்தைகளுக்கு அல்ல என்று பதிவு செய்ய வேண்டும், ஏனெனில் அப்பொதுதான் அந்தக் காணொலியைப்பற்றி எதேனும் கேள்விகள் இருப்பின் மாணவர்கள் கீழே உள்ள 'கொம்மென் பொக்ஸ்' (comment box) – இல் கேட்க முடியும். தொடர்ந்து, "Copyrights Checking" அதாவது பதிப்புரிமை சோதனையில் நாம் ஏதேனும் பாடல் அல்லது விபரம் நம்முடைய சுயாமனதா என்பதை ஆராயும். அதன் பிறகு இறுதியாக, தெரிவுநிலை (visibility) பகுதியில் 'அன்லிஸ்தட்' (Unlisted) என்பதை தேரிவு செய்யவேண்டும். அவ்வாறு அதனை செய்தால் 'லின்க்' (link) உள்ள மாணவர்கள் மட்டுமே அந்தக் காணொலியை காணலாம். ஆக, இது ஆசிரியர் மற்றும் மாணவர்கள் இருவருக்குமே எளிதாக இருக்கும்.


**1. தலைப்பு மற்றும் காணொலி விபரம்.**





2. இந்த காணொலி குழந்தைகளுக்கு அல்ல என்று பதிவு செய்தல்.




3. “Copyrights Checking” அதாவது பதிப்புரிமை சோதனை.




4. தெரிவுநிலை (visibility) பகுதியில் ‘அன்லிஸ்தட்’ (Unlisted) என்பதை தேரிவு செய்யவேண்டும்.




## உ) வலையொளியில் இலக்கியம் கற்பித்தலின் நன்மைகள்.

நன்மைகள் என கண்டோமானால், நிறைய உள்ளன. இணைய வழிக் கற்றல் கற்பித்தலின் மேன்மைகள் இணையம் வழியாகத் தமிழ்மொழி இலக்கியக் கற்றல் கற்பித்தல் நடைபெறுவதால் குறிப்பிடத்தக்க நன்மைகள் விளைகின்றன. அவை யாதெனில், மாணவர்கள் பாடங்களை எளிதாகப் புரிந்துகொள்ள முடிகிறது அதாவது ஒன்றைப் பற்றிய மேலதிக தகவலை அறிந்துகொள்ளும் வகையில் தொடுப்புகளைக் (hypelinks) கொண்டிருக்கிறது. வெவ்வேறு ஆற்றலும் விருப்பமும் கொண்ட மாணவர்கள் தாங்கள் விரும்பும் வகையில் கற்பதற்கு வாய்ப்பினை வழங்குகின்றது உதாரணதிற்கு எப்பொது படிக்க வேண்டும் என்று எண்ணும் நேரங்களிலெல்லாம் ‘லின்க்’ வாயிலாக படித்துக்கொள்ளலாம்.

தொடர்ந்து, எழுத்து (text), ஒலி (sound), காட்சி (visual), அசைவுப்படம் (graphics), நிகழ்ப்படம் (video), உடலியக்கம் (psychomotor), இருவழித் தொடர்பு (interactive) எனப் பலதரப்பட்ட வகையில் கற்பதற்குரிய சூழல் இருக்கின்றது. ஆக, மாணவர்களின் கற்றல் திறனையும் தன்னம்பிக்கையையும் வளர்க்கிறது. அதோடுமட்டுமின்றி சில மாணவர்கள் விரும்பும் வகையில் தனியாகக் கற்பதற்குரிய (individualise learning) வாய்ப்பும் அமைந்துள்ளது. இதனால், மனமகிழ்ச்சியுடன் கற்பதோடு வெல்விளி (சவால்) நிறைந்த கற்றல் சூழலை உருவாக்கிக் கொடுகின்றது. மாணவர்களின் ஆக்கச் சிந்தனையையும்

ஆய்வுச் சிந்தனையையும் இந்த இணையக் கல்வி வளர்த்துகொள்ள உதவுகிறது.

மேலும், குறிப்பிட்ட காலம், இடம், சூழல் என எந்தவித கட்டுப்பாடும் இல்லாமல் கற்பதற்குரிய வாய்ப்பு கிடைக்கிறது அதோடுமட்டுமின்றி, கிடைப்பதற்கு அரிய தகவல்களை விரைவாகவும் விரிவாகவும் பெற முடிகின்றது. குறைந்த செலவில் விலைமதிப்பில்லாத் தகவல்களையும் தரவுகளையும் நொடிப்பொழுதில் மிக எளிதாகப் இந்த வலையொளியின் மூலம் பெற முடிகிறது. கற்றலில் ஏற்படும் சிக்கல்களுக்குரிய தீர்வுகளைப் பல முனைகளிலிருந்தும் மூலங்களிலிருந்தும் உடனடியாகப் பெற முடிகிறது. உலகத்தின் எந்தப் பகுதியில் இருந்தாலும் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளவும், இணைய உரையாடல் கருத்துப் பரிமாற்றம் செய்யவும், நிகழ்ப்பட கலந்துரையாடல் நடத்தவும், மின்னஞ்சல் வழி தகவல்களைப் பரிமாறவும் வாய்ப்புகள் திறந்து கிடக்கின்றன. தகவல்களைத் திரட்டவும், சேமிக்கவும், புதிய தகவல்களை இற்றைப்படுத்தவும் (update), தேவையற்ற விவரங்களை நீக்கவும், விரும்பியபடி மாற்றங்களைச் செய்துகொள்ளவும் முடிகிறது.

**ஊ) வலையொளியை பயன்படுத்துவதாள் ஏற்படும் சிக்கல்கள்.**

முன்பே கூறியது போல வலையொளி உலக முழுதும் பகிரச் செய்யக்கூடிய ஒரு தொழில்நுட்ப மென்பொருளாகும். ஆக, இதில் நாம் பதிவேற்றும் அனைத்தும் அந்நிருவனத்தின் ‘டதாபேஸ்’ (Database) – இல் பதியும். ஆக, நாம் பதிவேற்றும் காணொலியில் எவ்வித தவறான தகவல்களையும் அல்லது நட்டுக்கும் மக்களுக்கும் தீங்கு விளைவிக்கும் வண்ணம் அமையக்கூடாது. அப்படி அமைந்தால் சிறை தண்டனைக்கு ஆளாகவிடுவோம். உதாரணத்திற்கு, நமது நாட்டில் நிலவக்கூடியவற்றைத் தவறான தகவலை வெளியிட்டால், அதன் பின்விழைவாக அபராதம் அல்லது வேறு பொருந்த தண்டனைகிடக்கும். ஆக, ஏதேனும் காணொலியை பதிவேற்றும் முன் கவனமாக இருக்க வேண்டும்.

தொடர்ந்து, ஆசிரியர்கள் பாடம் கற்பித்தல் முறையென்பது ஒருவருக்கொருவர் மாறுபடும். ஆக, மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் பாட ‘லின்க்’ – ஐ, வேறு

ஆட்களுக்கு அனுப்புவதன் மூலம், அந்த ஆசிரியர் ஏதேனும் சிக்கலுக்குள்ளாகுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. மாணவர்கள் பொறுப்புடன் இருந்து தனது பாடத்தில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும். ஆக, இத்தகையச் சிக்கல்களைப் கருத்தில் கொண்டு புறிந்துச் செயல்பட்டால் இவ்வலையொலியைக் கொண்டு நிறைய நன்மை அடையலாம்.

## முடிவு

தமிழ் மொழி இலக்கியம் கற்றல் கற்பித்தல் எளிமையான ஒன்றல்ல. அதுவும் இணையத்தில் தமிழ்மொழியைக் கற்பதும் கற்பிப்பதும் மிகக் கடுமையான ஒன்றாகும். இருந்தபோதிலும், ஒலியியல், எழுத்தியல், வரிவடிவம், இலக்கணம், இலக்கியம் என விரிந்து கிடக்கும் தமிழ்மொழியை இணையத்தின் துணைகொண்டு கற்கவும் கற்பிக்கவும் கூடிய வாய்ப்புகள் இன்று நடைமுறைக்கு வந்திருக்கின்றன. தற்போதைய சூழலில் இருக்கின்ற வாய்ப்புகளையும் ஏந்துகளையும் முழுமையாகப் பயன்படுத்தி தமிழ்மொழி இலக்கிய கற்றல் கற்பித்தலை முன்னெடுக்கும் முயற்சிகள் நடைபெற வேண்டும். மரபு வழியான கற்றல் கற்பித்தலுக்கு இடையில் இணையம் சார்ந்த நவின முறையிலான கற்றல் கற்பித்தலுக்கும் இடங்கொடுக்க வேண்டும். தமிழ்மொழி கற்றல் கற்பித்தலைப் புதிய இலக்கு நோக்கி நகர்த்த வேண்டிய பொறுப்பும் கடமையும் கல்வியாளர்களுக்கும் கணிஞர்களுக்கும் இருக்கின்றது. ஆகவே, உலக தமிழ்க் கல்வியும் நிலைபெற வேண்டுமானால், இணையம் வழியாகவும் இணைய ஏந்துகளின் வழியாகவும் தமிழைக் கற்கவும் கற்பிக்கவும் வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதனை உணர்ந்து, தமிழ்மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் தமிழைக் கற்கும் அல்லது கற்க விரும்பும் மாணவர்களும் இனையத்தையும் இணைய ஏந்துகளையும் பயன்படுத்த முன்வர வேண்டும். ஆக, இந்த வலையொலி மென்பொருள் இவர்களுக்கு பெறும் உதவியாக இருக்கும், ஏனெனில் சுலபாக அனுகி சிறந்தப் படைப்பை படைக்கலாம். இனிவரும் காலம் இணையத்தோடு இரண்டறக் கலந்துவிடப்போகின்றது. அதற்கேற்றால்போல, தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலும் இணையத்தை உள்வாங்கிக்கொள்ள வேண்டும். அப்பொழுதான், தமிழும் தமிழ்க்கல்வியும் மென்மேலும் இன்னும் நீடுநிலவும்.

தமிழ்மொழி தனது தொன்மையின் தொடர்ச்சியைத் தொலைத்துவிடாமல் நிலைத்து வாழும்.

## REFERENCES

செல்லினம் செயலி, 2005. In addition to Tamil and English keyboards, that include voice typing, this version adds Solvan - an advanced Text-to-Speech utility that reads aloud Tamil and English text. https://play.google.com/store/apps/details?id=com.murasu.sellinam&hl=ta&gl=US

Dr.Sajap Maswan. (1998). Kelebihan Penggunaan Internet dan Laman Web dalam Pengajaran dan Pembelajaran. Institut Perguruan Tuanku Bainun. Pulau Pinang, Malaysia. http://thirutamil.blogspot.com/2011/11/4.html

Collins,B. (1996). The Internet As An Educational Innovation: Lesson From Experience With Computer Implementation. Educational Technology, 36 (6), pg. 21- 30 http://thirutamil.blogspot.com/2011/11/4.html

An analysis on keyboard writing skills in online learning Pal Thamburaj, K., Arumugum, L., Samuel, S.J. 2015 2nd International Symposium on Technology Management and Emerging Technologies, ISTMET 2015 – Proceeding 7359062, pp. 373-377

Attentive fine-tuning of Transformers for Translation of low-resourced languages @LoResMT 2021 Puranik, K., Hande, A., Priyadharshini, R., (...), Thamburaj, K.P., Chakravarthi, B.R. 2021 Proceedings of the 4th Workshop on Technologies for Machine Translation of Low-Resource Languages, LoResMT 2021pp. 134-143